# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 144/மா/2023**
**நாள்: 19.9.2023**

திரு. ஷெரிப்,
கோவை மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

உதவி ஆணையாளர் (தெற்கு),
கோயம்புத்தூர் மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

கோயம்புத்தூர் மாவட்டம், கோவை தெற்கு, உக்கடம், 84-வது வார்டு, காந்தி நகர், எண்.162/4 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. ஷெரிப் என்பவரின் 21.05.2023 நாளிட்ட மனு 23.05.2023 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 144/மா/2023 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

கோயம்புத்தூர் மாவட்டம், கோவை தெற்கு, உக்கடம், 84-வது வார்டு, காந்தி நகர், எண்.162/4 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. ஷெரிப் என்பவர் தனது முறையீட்டு மனுவில்,

> அரசு அனுமதியின்றி சுகாதார சீர்கேடு விளைவிக்கும் M/s. Hanfas Enterprises கம்பெனியால் 10 வருடங்களுக்கு மேலாக இப்பகுதி மக்களாகிய நாங்கள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கின்றோம். பல துறைகளுக்கும் 4 ஆண்டுகளுக்கு மேலாக புகார் மனுவும் அளித்திருக்கிறோம். குற்றச்சாட்டுக்குள்ளான சம்மந்தப்பட்ட கம்பெனியின் ஓனர் நடிகர் சரத்குமார் அவர்களின் சமத்துவ மக்கள் கட்சியில் முக்கிய பொறுப்பு வகிப்பதால் கடந்த காலங்களில் கொடுத்த புகார் மனு மீது எந்த சுகாதார ஆய்வாளர்களும் நடவடிக்கை எடுக்கவில்லை. கம்பெனியை ஆய்வு செய்தபின் அக்கம்பெனிக்கு சாதகமாகவே நடந்து கொண்டிருக்கிறார்கள். கடந்த காலங்களில் நடவடிக்கை எடுக்கவரும் ஊழியர்களை பணம் மூலமாகவோ, அரசியல் தலையீடுகள் மூலமாகவோ நடவடிக்கைகளை தடுத்து நிறுத்தியிருக்கிறார்கள் என இப்பகுதி மக்களாகிய நாங்கள் எண்ணுகின்றோம். அரசியல்

பலமும், பணபலமும் இருந்தால் என்ன வேண்டுமானாலும் செய்யலாம். நம்மை ஒன்றும் செய்யமுடியாது என்ற எண்ணம் அக்கம்பெனிக்கு சம்மந்தப்பட்டவர்களுக்கும் வந்துவிட்டது.

இம்மனுவில் குறிப்பிட்டுள்ள ஆக்கிரமிப்பு பகுதியை 21.07.2022 அன்று ஆய்வு செய்த அனுப்பர்பாளையம் கிராம வருவாய் ஆய்வாளர் அரசிற்கு சொந்தமான ராஜவாய்க்கால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது உண்மை என்ற அறிக்கையை கோயம்புத்தூர் வட்டாட்சியர் (வடக்கு) அவர்களிடத்தில் சமர்ப்பித்துள்ளார். குறிப்பிட்டுள்ள ஆக்கிரமிக்கப்பட்ட ராஜவாய்க்காலின் மீது பல வீடுகளும், பல குடோன்களும் கட்டப்பட்டுள்ளது. ஒன்றரை வருடமாகியும் ஏன் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றதன் பதில் எங்களுக்கு இப்பொழுதுதான் தெரிகிறது. ஏன் என்றால் ஆக்கிரமிக்கப்பட்ட ராஜவாய்க்காலின்மீது கட்டப்பட்டுள்ள கட்டிடங்களின் பட்டியலில் புகார் மனுவில் உள்ள சுகாதார சீர்கேடு விளைவிக்கும் Hanfas Enterprises என்ற கம்பெனியும் உள்ளது. அந்த பணம் மற்றும் அரசியல் பலம் படைத்த கம்பெனிக்கு ஆதரவாகத்தான் ஆக்கிரமிப்பையும் கோவை மாநகராட்சி ஊழியர்கள் அகற்றவில்லை என்று நாங்கள் இப்பொழுது கருதுகின்றோம்.

இந்த குற்றச்சாட்டு முறையீட்டு மனுவை முக்கியமாக முறைமன்ற நடுவத்திற்கு அனுப்ப காரணம் சம்மந்தப்பட்ட கம்பெனி லாரி லாரியாக வந்து குப்பைகளை இறக்குகிற புகைப்படத்தை கடந்த 18.05.2023 உதவி ஆணையாளருக்கு என்னுடைய தொலைபேசி வாட்ஸ் ஆப் மூலம் அனுப்பியிருந்தேன். ஆனால் என்னுடைய தொலைபேசி எண்ணை சம்மந்தப்பட்ட கம்பெனி ஆட்களிடமே கொடுத்து மிரட்ட வைக்கிறார்கள். நாளை எனக்கு ஏதேனும் நடந்துவிட்டால் கோவை மாநகராட்சி நிர்வாகம் என்னுடைய குடும்பத்தை பார்க்குமா ? இந்த விடயத்தை முறைமன்ற நடுவர் அவர்களிடமே விட்டுவிடுகிறேன். மேலும்

**தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியம் செய்த ஆய்வில் Hanfas Enterprises கம்பெனியின் மீதான கீழ்க்கண்ட குற்றம் கண்டறியப்பட்டு உறுதி செய்யப்பட்டுள்ளது.**

1. உடல் நலத்திற்கு கேடு விளைவிக்கும் குப்பைக் கழிவு மூட்டைகளை கம்பெனியின் உள்ளேயும் வெளியேயும் அதிகமானளவில் போட்டு வைத்து எங்கள் பகுதி மக்களுக்கு சுகாதார சீர்கேடு செய்வது உறுதி செய்யப்பட்டுள்ளது. இக்குப்பைகளினால் கொசு, பாம்பு தொல்லையும், நாற்றமும் அடிக்கிறது. அதில் முக்கியமாக மருத்துவ கழிவுகளும் அடிக்கடி தென்படுகிறது.

2. Industrial areaவில் இயங்கவேண்டியது போன்றதொரு கம்பெனி எங்கள் குடியிருப்புகளின் பகுதியின் மத்தியில் அமைந்திருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

3. குடியிருப்பு பகுதிகளில் இதுபோன்ற கம்பெனிகளை தொடங்கவோ, இயக்கவோ அரசு அனுமதிப்பதில்லை. சம்மந்தப்பட்ட கம்பெனி கோவை மாநகராட்சியிடமோ, TNPCB யிடமோ அனுமதி வாங்காமல் இயங்குகிறது என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

4. சம்மந்தப்பட்ட கம்பெனியின் ஒருபகுதி 40 அடி ராஜவாய்க்காலின் மீது ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டுள்ளது என்பது கண்டறியப்பட்டுள்ளது.

5. சம்மந்தப்பட்ட இக்கம்பெனி Trading Register மட்டுமே செய்துவிட்டு, Manufacturer கம்பெனிகள் இயக்குவது போன்ற Machineryகளை வைத்து Recycling செய்வதும் ஆய்வில் உறுதி செய்யப்பட்டுள்ளது. இக்கம்பெனி ஊழியர்கள் இரவு நேரத்தில் இயந்திரங்களை அதிகமாக இயக்குவதினால் மின்சாரம் அதிகமாக இழுக்கப்பட்டு எங்கள் பகுதியல் EB Transform அடிக்கடி பழுதடைகிறது. மின்வெட்டும் அடிக்கடி அதிக நேரம் ஏற்படுகிறது என்பது கண்டறியப்பட்டது.

இவ்வாறு பல குற்றங்களை இக்கம்பெனி செய்துகொண்டிருக்கிறது. இந்த கம்பெனியை நிரந்தரமாக மூட வேண்டி 4 வருடங்களுக்கு மேலாக போராடி வருகிறோம். சம்மந்தப்பட்ட கம்பெனியின் அனைத்து விதமான குற்றச்சாட்டுகளுக்கான ஆதாரங்கள் கொடுத்தும், TNPCBயின் நடவடிக்கை கோரிய கடிதம் கிடைத்தும், இன்றைய நாள்வரையில் கோவை மாநகராட்சி ஊழியர்களால் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

ஆகவே எனது புகார் மனுவின் மீது நிலையை கவனிக்காத கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் மீதும், குற்ற செயல்களில் ஈடுபட்டு வருகின்ற கம்பெனிக்கு ஆதரவாகவும், அக்கம்பெனி சம்மந்தப்பட்ட நபர்களுக்கும் என்னுடைய தொலைபேசி எண் மற்றும் விபரங்களை அளித்து என்னுடைய உயிருக்கு கேடு விளைவிக்க பார்த்த உதவி ஆணையாளர் (மத்திய மண்டலம்) அவர்கள் மீதும், நடவடிக்கை எடுக்க அதிகாரமிருந்தும், மனமில்லாமல் சம்மந்தப்பட்ட கம்பெனிக்கு வெறுமனே நோட்டீஸ் மட்டும் அளித்துவிட்டு நடவடிக்கை எடுக்காமல் அலட்சியமாக மெத்தனப்போக்கோடு செயல்பட்ட 84 வது வார்டு சுகாதார ஆய்வாளர் மீதும், ஆகிய மூவர் மீதும் கண்டிப்பாக துறை ரீதியான நடவடிக்கை எடுக்க உத்திரவிட வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன் எனக் கூறியுள்ளார்.

**இம்மனு தொடர்பாக கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம், உதவி ஆணையரிடம் 26.5.2023 நாளிட்ட கடிதத்தில் அறிக்கை கோரப்பட்டது :-**

**கோயம்புத்தூர் மாநகராட்சி, மத்திய மண்டலம், உதவி ஆணையர் தன்னுடைய 10.6.2023 மற்றும் 4.8.2023 நாளிட்ட அறிக்கையில் :-**

சுகாதார ஆய்வாளரின் கள ஆய்வு அறிக்கையில் மேற்படி குடோன் பழைய பொருட்கள் வாங்கி சேமித்து விற்பனை செய்யும் குடோனாக செயல்பட்டு வருகிறது என்றும் தேவையில்லா உபகரணங்களை தீ வைத்து எரிப்பதினால் ஏற்படும் நச்சுப்புகையானது சுவாசக் கோளாறு ஏற்படுத்துவது மட்டுமல்லாது பழைய பொருட்களை உடைப்பதற்கு 25 HP குதிரைத் திறன் கொண்ட அரவை இயந்திரம் கொண்ட மின் மோட்டார் பயன்படுத்தி அரைப்பதினாலும், அதன் மூலம் அதிகப்படியான சப்தம் ஏற்படுவதாலும் மற்றும் மழைக்காலங்களில் மழைநீர் தேங்கி துர்நாற்றம் ஏற்படுவது மட்டுமல்லாமல் கொசு உற்பத்தியாகி தொற்று ஏற்படுவதற்கு ஏதுவாகவும் அமைந்துள்ளது என்றும், இதனால், தமிழ்நாடு மக்கள் நல்வாழ்வு பொது சுகாதார சட்டம் 1939 சட்டப் பிரிவு 41 (1), 44, 51 (1), (2), (3), 86 & 134 (1) முதல் அறிவிப்பு சார்பு செய்யப்பட்ட நாள்: 10.03.2023 மற்றும் 02.05.2023 அன்று பொது சுகாதாரத்திற்கும் கேடு ஏற்பட்டு வருவதைத் தொடர்ந்து ஹன்பாஸ் எண்டர்பிரைசஸ் என்ற குடோனை இவ்வறிவிப்பு கிடைத்த 7 நாட்களுக்குள் அகற்ற அறிவிப்புகள் சார்வு செய்யப்பட்டது என்றும் தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் அறிவுறுத்தலின்படி அந்நிறுவனத்திடமிருந்து அறிக்கை கோரப்பட்டது என்றும் அந்நிறுவனம்

கடந்த 15 வருடங்களாக ஹன்பாஸ் எண்டர்பிரைசஸ் என்ற குடோனை நடத்தி வருவதாகவும் குடோனின் முன்புறம் 6 ஏக்கரில் தென்னந்தோப்பும், பின்புறம் 5 ஏக்கர் காலியிடமும், குடோனின் இடதுபுறம் 10 ஏக்கர் தென்னந்தோப்பும், வலது புறம் 25 செண்ட் இடம் உள்ளதாகவும் தெரிவித்து அவரது சொந்த இடத்தில் வலதுபுறத்தில் சில குடியிருப்பு வீடுகள் அமைந்துள்ளதாகவும் அவர்கள் வீடுகளிலிருந்து வெளியேறும் கழிவுநீர், சாக்கடை நீர் போன்றவை காலியிடத்தில் விடவேண்டாம் என கூறியதாலும், சில அமைப்புகள் பணம் கேட்டு தொந்தரவு செய்ததை தொடர்ந்து பணம் கொடுக்க மறுத்ததாலும், தவறான குற்றச்சாட்டை தன் மீது சுமத்துவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும், இருப்பினும், பொது மக்களின் நலன் கருதி புதிதாக காலியிடத்தில் சேமித்து வைக்கப்பட்டுள்ள பிளாஸ்டிக் கழிவு பொருட்களை 3 நாட்களுக்குள் அகற்றி சுத்தம் செய்ய வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டதை தொடர்ந்து வார்டு எண்.84-ற்குட்பட்ட கோட்டை புதூர் காந்தி நகர் குடியிருப்பு பகுதியில் இயங்கி வரும் "ஹன்பாஸ் எண்டர்பிரைசஸ்" என்ற பிளாஸ்டிக் குடோன் தொடர்ந்து புதிதாக காலியிடத்தில் சேமித்து வைக்கப்பட்டுள்ள பிளாஸ்டிக் கழிவு பொருட்களை அகற்றி சுத்தம் செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

**3. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 8.8.2023 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 3.8.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

**மனுதாரர் 3.8.2023 அன்று நேரடி விசாரணையில் ஆஜராகவில்லை. மாறாக எழுத்து பூர்வமான தனது வாக்குமூலத்தை இம்முறைமன்றத்திற்கு அனுப்பியுள்ளார். மேற்கண்ட எழுத்துபூர்வ வாக்குமூலத்தில் :—**

"நாங்கள் வசிக்கும் பகுதியில் 84 வார்டில் இயங்கும் ஹன்பாஸ் எண்டர்பிரைசஸ் நிறுவனம் அதிக அளவில் பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் குப்பைக் கழிவுகளை சேமித்து வைப்பதாலும் சுகாதாரக்கேடு ஏற்படுவதாகவும் அதனால் உள்ளாட்சி அமைப்பிடம் உரிய அங்கீகாரம்/அனுமதி பெறாமல் பல ஆண்டுகளாக இயங்கி எங்கள் பகுதி மக்களுக்கு சுகாதார சீர்கேடு விளைவிக்கின்ற Hanfas Enterprises என்ற நிறுவனத்தின் மீது, மாவட்ட உள்ளாட்சி நிறுவனச் சட்டம் 1920 மற்றும் பொது சுகாதாரச் சட்டம் 1939ன் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டியும், தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971-ன் பிரிவு 56 (2a)-ன் கீழ் சம்மந்தப்பட்ட கம்பெனியை பூட்டி சீல் வைக்க நடவடிக்கை எடுக்க கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு உத்தரவிட வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன் என குறிப்பிட்டுள்ளார்.

**கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்தின் உதவி ஆணையர் 8.8.2023 அன்று நேரடி விசாரணையில் ஆஜராகி பின்வரும் தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.**

மனுதாரர் தான் வசிக்கும் வார்டு எண் 84 கோட்டைபுதூர் காந்தி நகர் குடியிருப்புப் பகுதியில் உறன்பாஸ் எண்டர்பிரைசஸ் என்ற பிளாஸ்டிக் குடோன் இயங்கி வருவதாகவும், அங்கு அதிக அளவில் பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் குப்பைக் கழிவுகளை சேமித்து வைப்பதாலும், பிளாஸ்டிக் ஒயர்களை எரிப்பதால் நச்சுடன் கூடிய மாசு ஏற்படுவதாக தெரிவித்து அளித்துள்ள புகாரையொட்டி மேற்கண்ட பகுதி ஆய்வு செய்யப்பட்டது. மேற்கண்ட குடோன் பட்டா இடத்தில் அமைந்துள்ளது. **ஆனால் மாநகராட்சியில் லைசன்ஸ் பெறவில்லை.** குடியிருப்புப் பகுதியில் அமைந்துள்ள மேற்கண்ட குடோனில் தீப்பற்றக்கூடிய பிளாஸ்டிக் பொருட்களை சேமித்து வைத்துள்ளது கண்டறியப்பட்டு, சேமித்து வைக்கப்பட்டுள்ள பிளாஸ்டிக் பொருட்களை அகற்றிட இரண்டு அறிவிப்புகள் சார்வு

செய்யப்பட்டுள்ளது. மேலும் மேற்கண்ட இடத்தில் குடோன் உரிமையாளரால் தேக்கி வைக்கப்பட்டிருந்த பிளாஸ்டிக் மற்றும் அதன் கழிவுகள் அகற்றப்பட்டுவிட்டன எனவும் மேற்கண்ட குடோனுக்கு அபராதம் எதுவும் விதிக்கப்படவில்லை எனவும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். இந்நேர்வு தொடர்பான புகைப்படங்களை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்.

மேலும் என்னால் இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் எனது 4.8.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

**முறையீட்டு மனுதாரரின் மனு மற்றும் அவரது எழுத்துபூர்வ வாக்குமூலம் மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சியின் மத்திய மண்டலம் உதவி ஆணையரின் வாக்குமூலம் மற்றும் அறிக்கை ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் பின்வரும் விவரங்கள் தெரிய வருகின்றன.**

கோயம்புத்தூர், கோட்டைப்புதூரைச் சேர்ந்த திரு. ஷெரிப், தான் வசிக்கும் பகுதியில் அனுமதியின்றி M/s. Hanfas Enterprises என்ற கம்பெனியின் குடோனில் பழைய பொருட்களை சேமித்து விற்பனை செய்வதாகவும், கம்பெனியின் உள்ளேயும், வெளியேயும் குப்பைகளை மூட்டைகளாக கட்டி வைத்து சுகாதார கேடு விளைவிப்பதாகவும், இது பற்றி புகார் தெரிவித்தும் கோயம்புத்தூர் மாநகராட்சி எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று கூறி, அக்கம்பெனியை அகற்ற உரிய நடவடிக்கை எடுக்கும்படி கோரியுள்ளார்.

மனுதாரர் குறிப்பிட்ட M/s. Hanfas Enterprises என்ற கம்பெனியை ஆய்வு செய்ததில் அங்கு பிளாஸ்டிக் குடோனாக செயல்பட்டு வருவதாகவும், குப்பை கழிவுளை சேமித்து வைப்பதாலும், அதனால் சுகாதார கேடு ஏற்படுகிறது என்றும், எனவே, தமிழ்நாடு மக்கள் நல்வாழ்வு பொது சுகாதாரம் சட்டம் 1939 சட்டப் பிரிவுகளின்படி 10.3.2023 அன்று அறிவிப்பு சார்பு செய்யப்பட்டது என்றும், 2.5.2023 அன்று இவ்வறிவிப்பு கிடைத்தவுடன் 7 நாட்களுக்குள் அகற்றி இடத்தினை காலியாக ஆய்வின்போது காட்ட வேண்டும் என்று அறிவிப்பு சார்பு செய்யப்பட்டது என்றும், அதன்படி அந்நிறுவனம் பிளாஸ்டிக் கழிவுப் பொருட்களை அகற்றி சுத்தம் செய்துள்ளனர் என்று கோயம்புத்தூர் மத்திய மண்டலத்தின் உதவி ஆணையரின் அறிக்கையிலும் வாக்குமூலத்திலும் தெரிவித்துள்ளார்.

மேற்குறிப்பிட்ட பிளாஸ்டிக் கழிவு பொருட்களை சேமித்து வைத்து விற்பனை செய்வதால் அப்பகுதி மக்கள் மிகவும் சுகாதார கேட்டிற்கு ஆளாகியுள்ளார்கள் என்பதும், அப்பகுதி மக்கள் 2022 ஆண்டு முதல் மேற்கண்ட கம்பெனி குறித்து புகார் மனு அளித்தும் கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் அலுவலர்கள் உடனடியாக நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை என்பதையும் அறியமுடிகிறது.

மேலும், கோயம்புத்தூர் மாவட்டம், காந்தி நகர், அனுப்பர்பாளையம், க.ச.எண்.62–ல் இயங்கிவரும் திருவாளர்கள் ஹன்பாஸ் எண்டர்பிரைசஸ் என்கின்ற நிறுவனம் குடியிருப்புப் பகுதியில் குப்பைகளை சேமித்து வருவது மற்றும் தீயிட்டு எரிப்பது குறித்து, தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம், கோவை வடக்கு மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், கோயம்பத்தூர் மாநகராட்சி ஆணையருக்கு அனுப்பியுள்ள தனது 28.03.2023 நாளிட்ட கடிதத்தில் மேற்கண்ட ஹன்பாஸ் நிறுவனம், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம், கோவை வடக்கு உதவிப் பொறியாளரால் 09.03.2023 அன்று ஆய்வு செய்யப்பட்டது எனவும்,

ஆய்வின்போது நிறுவனத்தில் பழைய பொருட்களை வாங்கி தரம் பிரித்து விற்பனை செய்து வருவது அறியப்பட்டது எனவும் அந்நிறுவனத்தில் பழைய பிளாஸ்டிக் பொருட்களை உடைப்பதற்கு 25 குதிரை திறன் (25HP) அளவு கொண்ட அரவை இயந்திரம் உள்ளது என்றும் அதிக அளவிலான பழைய பொருட்களை நிறுவனத்திற்கு உள்ளேயும் வெளியேயும் சேமித்து வைத்திருப்பதையும் அந்நிறுவனமானது பழைய பொருட்களை மூட்டை மூட்டையாக நிறுவனத்திற்கு வெளியே முன்புறமும் பக்கத்து இடத்திலும், திறந்த வெளியில் அதிகளவில் சேமித்து வைத்திருப்பது அறியப்பட்டது என்றும் மேலும் அதிக அளவிலான பொருட்களை திறந்த வெளியில் சேமித்து வைத்திருப்பதனால் அருகிலுள்ள குடியிருப்புகளுக்கு பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளது. மேலும் குடியிருப்புப் பகுதியில் இயங்கும் தொழிலகங்களுக்கு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் இசைவாணை வழங்குவதில்லை என தெரிவித்துள்ளார்.

மேலும், சிறு தொழிலகங்கள் மற்றும் வணிகம் தொடர்பான நிறுவனங்கள் குறித்தான புகார்கள் அனைத்தும் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பு, உள்ளாட்சி அமைப்பின் உள்ளாட்சி நிறுவனச் சட்டம் –1920 மற்றும் பொது சுகாதாரச் சட்டம் 1939–ன்படி உரிய நடவடிக்கை எடுத்தல் வேண்டும் என தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய 18.09.2014 நாளிட்ட சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டு, உள்ளாட்சி அமைப்பின் உள்ளாட்சி நிறுவனச் சட்டம்–1920 மற்றும் பொது சுகாதாரச் சட்டம் 1939–ன்படி உரிய நடவடிக்கை எடுத்திட கோவை வடக்கு மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையரை கேட்டுக்கொண்டுள்ள நிலையில், மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் மேற்கண்ட கடிதத்தின் மீது கோயம்புத்தூர் மாநகராட்சி அலுவலர்கள் உரிய கவனம் செலுத்தவில்லை என்பதையும், அக்கடிதத்தை அவர்கள் தெரிந்தே உதாசினப்படுத்தியுள்ளதையும் காணமுடிகிறது. இத்தகைய செயல் வன்மையாகக் கண்டிக்கத்தக்கதாகும்.

**மனுதாரர் மேற்கண்ட நிறுவனத்தால் ஏற்படும் சுகாதாரக்கேடுகளை குறித்து புகார் மனு அனுப்பிய உடனே கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் நடவடிக்கை எடுத்து இருந்தால், இம்மாதிரியான புகார் மனுக்களை தவிர்க்கலாம் என இம்முறைமன்றம் சுட்டிக்காட்ட விரும்புகிறது.** கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டல அலுவலர்களின் மெத்தனப்போக்கால், கோயம்புத்தூர் கோட்டைபுதூர், காந்திநகர் குடியிருப்பு பகுதியில் சுகாதாரக்கேடு ஏற்பட வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இது மிகவும் கண்டிக்கத்தக்கது. மேலும், கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டல கள ஆய்வாளர்கள் மேற்கண்ட இடத்தை முறையாக கள ஆய்வு செய்யவில்லை என்பதும், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் 22.3.2023 அன்று உள்ளாட்சி அமைப்பின் உள்ளாட்சி நிறுவனச் சட்டம் 1920 மற்றும் பொது சுகாதாரச் சட்டம் 1939ன்படி நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தியும் கோயம்புத்தூர் மாநகராட்சி மற்றும் மண்டல அலுவலர்கள் **2.5.2023 அன்றுதான் அதாவது இரண்டு மாதங்களை கடந்து அந்நிறுனத்திற்கு அறிவிப்பு சார்பு செய்யப்பட்டுள்ளது. இது மிகவும் கண்டிக்கத்தக்கது ஆகும்.**

2014-ஆம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச் சட்டம் மற்றும் விதிகளில், இம்முறைமன்றத்திற்கும் அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்திற்குட்பட்டு குறிப்பாக

பிரிவு 7. The Ombudsman shall perform all or any of the following functions, namely –

(i) enquire into any written complaint from the Government or that has come to the notice of the Ombudsman in which corruption or maladministration of a public servant or a local body is alleged;

(ii) pass an order on the proved allegation in the following manner, namely

(a) xx

(b) xx

(c) Where the irregularity is due to wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules. அடிப்படையில் இம்முறைமன்றம் பின்வருமாறு ஆணையிடுகிறது.

கோயம்புத்தூர் மாநகராட்சி, கோட்டைபுதூரில், M/s. Hanfas Enterprises என்ற நிறுவனத்தின் மீது, மனுதாரர் புகார் மனு அளிக்கும் முன்னரே, உரிமம் பெறாமல் பல வருடங்களாக சுற்றுப்புறச் சூழலுக்கு கேடு விளைவிக்கும் வகையில் செயல்பட்டு வந்த இந்நிறுவனத்தை, கோயம்புத்தூர் மாநகராட்சி, மத்திய மண்டல உதவி ஆணையர்கள், கள ஆய்வாளர்கள், சம்பந்தப்பட்ட அலுவலர்கள் அனைவரும் கண்டும் காணாமலும் இருந்தது மட்டுமல்லாமல், உள்நோக்கத்துடன், உடந்தையாகவும் இருந்துள்ளார் என்பது தெளிவாகிறது. இதற்கு இம்முறைமன்றமும் தன்னுடைய கண்டனத்தையும், அதிருப்தியையும் பதிவு செய்கிறது.

கோயம்புத்தூர் மாநகராட்சி கோட்டைபுதூரில் பல வருடங்களாக அனுமதி (ம) உரிமம் இல்லாமல் இயங்கி வரும் **M/s. Hanfas Enterprises என்ற நிறுவனத்தால் சுகாதாரக் கேடு ஏற்படுகிறது என்று புகார் மனு பெற்றும், அதன் மீது உரிய நடவடிக்கை எடுக்க தவறிய கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்தின் சம்பந்தப்பட்ட முன்னாள் மற்றும் இந்நாள் அலுவலர்கள் மீது உரிய ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறும், எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து அறிக்கையினை 30 நாட்களுக்குள் இம்முறைமன்றத்திற்கு அனுப்பிவைக்குமாறும் கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் பரிந்துரைசெய்து அவ்வாறே ஆணையிடுகிறது.**

மேலும், மேற்படி இடத்தினை, கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையர் நேரிடையாக ஆய்வு செய்து அங்கு தேக்கி வைக்கப்பட்டுள்ள பிளாஸ்டிக் போன்ற கழிவுகளை அகற்றப்படுவதையும் அப்பகுதியில் நெகிழிக்கழிவு மேலாண்மை (திருத்தப்பட்டது) விதி 2022, பிரிவு 6 (2) மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சி மன்றத்தில் நிறைவேற்றப்பட்ட உபவிதிகளின்படி நடவடிக்கை எடுக்குமாறும் கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார். இதில் சம்பந்தப்பட்ட கள அலுவலர்களுக்கு உள்நோக்கமும், உடந்தையாக செயல்படும் தன்மை இருப்பதாகத்தான் கருத வேண்டியுள்ளது. உதவி ஆணையர் தனது கடமையிலிருந்து தவறியுள்ளார். எனவே சம்பந்தப்பட்ட உதவி ஆணையர் மீதும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

மேலும், இவ்வாறு சுகாதாரக்கேடு விளைவிக்கும் குடோன்களை Chief Health Officer கள ஆய்வு செய்து அவற்றின் மீது உரிய சட்டப்பூர்வமான நடவடிக்கை எடுக்குமாறு கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

The lethargy, indifference, lack of devotion to duties shown by the Zonal Officials from the Assistant Commissioner down to the field functionaries are shocking. How did they allow such a unit to function without any licence from the Local Body, that is the Coimbatore Corporation in the instant case? The Commissioner Coimbatore Corporation is directed to initiate disciplinary action against all the delinquents involved in this sordid scam besides issuing strict instructions to the other zones to launch preventive and proactive steps in such cases to forestall any serious contagious diseases in the areas where they are located without licenses and environmental clearances.

2023–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 19–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. ஷெரிப்,
   கதவு எண்.162/4, காந்தி நகர்,
   84-வது வார்டு, கோட்டைப்புதூர்,
   தெற்கு உக்கடம், கோவை தெற்கு,
   கோயம்புத்தூர் - 641 001.
2. ஆணையர்,
   கோயம்புத்தூர் மாநகராட்சி,
   கோயம்புத்தூர்.
3. உதவி ஆணையாளர் (பொ),
   (மத்திய மண்டலம்),
   கோயம்புத்தூர் மாநகராட்சி,
   கோயம்புத்தூர் மாவட்டம்.
4. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
   நகர் நிர்வாக அலுவலக வளாகம்,
   75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   இராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 600 028.
5. அரசு முதன்மைச் செயலாளர்,
   நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை,
   தலைமைச் செயலகம், சென்னை – 600 009.
6. இணை இயக்குநர்
   ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 600 028.

நகல் :

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்